பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

26 11 2025 7.15

புதன்கிழமை இரவு

ஆகாஷவாணி செய்திகள்

*தலைப்புச் செய்திகள்*

1. வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான இலக்குகளை எட்டுவதற்கு அரசியல் சாசனம் உத்வேகம் அளிப்பதாக உள்ளது என்று குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

2. புனே மெட்ரோ ரயில் இரண்டாம் கட்ட திட்டப் பணிகளுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

3. நாட்டின் வளர்ச்சியில் பால்வளத் துறை முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

4. இந்தியாவும், வெனிசுலாவும் பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது என முடிவு செய்துள்ளன.

5. 2030 ஆம் ஆண்டு காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் இந்தியாவில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

---- இனி விரிவான செய்திகள் ---

வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான இலக்குகளை எட்டுவதற்கு அரசியல் சாசனம் உத்வேகம் அளிப்பதாக உள்ளது என்று குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

தில்லி சட்டப்பேரவையில் நடைபெற்ற அரசியல் சாசன தின நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

மத்திய அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் காரணமாக நாடு பல்வேறு துறைகளில் சாதனைகளை படைத்து வருவதாக அவர் கூறினார்.

உலகின் நான்காவது பெரிய பொருளாதார நாடாக இந்தியா உருவெடுத்து இருப்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

25 கோடிக்கும் மேற்பட்டோர் வறுமையின் பிடியில் இருந்து மீட்கப்பட்டதாகவும் திரு சி பி ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

>><><><><><<

புனே மெட்ரோ ரயிலின் 9 ஆயிரத்து 857 கோடி ரூபாய் மதிப்பிலான இரண்டாம் கட்ட திட்டப் பணிகளுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இன்று புதுதில்லியில் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இதனை செய்தியாளர்களிடம் தெரிவித்த தகவல் ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ், Kharadi – Khadakwasla மற்றும் Nal Stop – Waraje – Manik Baug ஆகிய வழித்தடங்களில் மெட்ரோ ரயில் இயக்கப்படவுள்ளதாக கூறினார்.

சுமார் 31 கிலோ மீட்டர் தொலைவுக்கு அமையவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மகாராஷ்டிரா மற்றும் குஜராத் மாநிலங்களுக்கு உட்பட்ட 4 மாவட்டங்கள் பயன்பெறும் வகையில், இரண்டு பல்தட ரயில் திட்டங்களுக்கும் இக்கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டதாக அவர் கூறினார்.

2 ஆயிரத்து 781 கோடி ரூபாய் செலவில் இதற்கான திட்டம் செயல்படுத்தப்படவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

>><><><><><<

நாட்டின் வளர்ச்சியில் பால்வளத் துறை முக்கிய பங்கு வகிப்பதாக அத்துறைக்கான மத்திய இணையமைச்சர் திரு எஸ் பி சிங் பாகல் கூறியுள்ளார்.

தேசிய பால் தினத்தையொட்டி இன்று புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

பால் உற்பத்தியில் இந்தியா முதலிடத்தில் உள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் பால்வளத்துறையின் வளர்ச்சிக்கு சிறப்பாக பங்களித்தவர்களுக்கான தேசிய விருதுகளையும் திரு எஸ் பி சிங் பாகல் வழங்கினார்.

>><><><><><<

நாடுமுழுவதும் ஒன்பது மாநிலங்கள் மற்றும் மூன்று யூனியன் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளின்கீழ் இதுவரை 99 புள்ளி இரண்டு ஐந்து சதவீத விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்பட்டு உள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

இவற்றில் 63 புள்ளி இரண்டு மூன்று சதவீத படிவங்கள் டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையத்தின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

இப்பணிகளில் 16 லட்சத்திற்கும் மேற்பட்டோர் ஈடுபட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>><><><><<

தலைமைத் தேர்தல் ஆணையர் திரு கியானேஷ்குமார், ஜனநாயகம் மற்றும் தேர்தல் தொடர்பான சர்வதேச மையத்தின் தலைமை பொறுப்பினை அடுத்த மாதம் 3 ஆம் தேதி ஏற்கவுள்ளார்.

ஸ்வீடனின் Stockholm -ல் நடைபெறும் நிகழ்ச்சியில் அவர் இப்பொறுப்பினை ஏற்கவுள்ளதாக தேர்தல் ஆணையத்தின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த மையத்தில் ஆஸ்திரேலியா, பெல்ஜியம், பிரேசில், மங்கோலியா உட்பட 31 நாடுகள் இடம்பெற்றுள்ளன.

>><><><><<

நிலக்கரி சுரங்கங்களின் 13 ஆவது சுற்று ஏலத்தில் 3 சுரங்கங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு இருப்பதாக மத்திய அரசு கூறியுள்ளது.

ஜார்க்கண்ட் மற்றும் ஒடிஷா மாநிலங்களில் இந்த சுரங்கங்கள் உள்ளதாக நிலக்கரி துறையின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த சுரங்கங்கள் செயல்பாட்டிற்கு வரும் போது நிலக்கரி உற்பத்தி வெகுவாக அதிகரிக்கும் என்றும், ஆண்டுதோறும் 43 ஆயிரத்து 330 கோடி ரூபாய் வருவாய் கிடைக்கும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>><><><><<

ஆதார் தரவுகளின் துல்லியத்தை உறுதி செய்யும் நோக்கில் உயிரிழந்த 2 கோடிக்கும் மேற்பட்டோரின் ஆதார் எண்கள் நீக்கப்பட்டுள்ளதாக தனித்துவ அடையாள ஆணையம் கூறியுள்ளது.

ஆதார் எண்களின் போலி பயன்பாட்டை தடுக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய அரசின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

உயிரிழந்தவர்களின் விவரங்களை அதற்கான இணைய தளத்தில் சம்பந்தப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டு உள்ளதாக அந்த செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>><><><><><<

இனி சர்வதேச திரைப்பட விழா குறித்த செய்திகள்...

(சவுண்ட் பைட் – Opening Music – 8 செகண்ட்ஸ்)

கோவாவில் நடைபெற்று வரும் சர்வதேச திரைப்பட விழாவில் இன்று ஈரான் மற்றும் ஈராக் நாடுகளைச் சேர்ந்த திரைப்பட இயக்குநர்கள் தங்களது அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர்.

ஈரானைச் சேர்ந்த Seyed Hesan Farahmand Joo தாம் இயக்கிய My daughter's hair திரைப்படம் குறித்து எடுத்துரைத்தார்.

ஈரானில் பெண்கள் எதிர்கொள்ளும் இடர்பாடுகளை மையக்கருத்தாக கொண்டு இந்த திரைப்படம் உருவாக்கப்பட்டதாக அவர் கூறினார்.

ஈராக்கின் The president's cake திரைப்படம் குறித்து இதில் விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

இந்த திரைப்பட விழாவில் அசாமின் Bhaimon Da திரைப்படமும் Patralekha ஆவணப் படமும் பார்வையாளர்களின் கவனத்தை வெகுவாக ஈர்த்தன.

(சவுண்ட் பைட் – Closing Music – 8 செகண்ட்ஸ்)

>><><><><><<

அடுத்த ஆண்டுக்கான குடியரசு தின கொண்டாட்டங்களையொட்டி பொதுமக்கள் பங்கேற்கும் வகையில் மூன்று போட்டிகளை பாதுகாப்புத்துறை அறிவித்துள்ளது.

My Gov இணைய தளத்துடன் இணைந்து இந்த போட்டிகள் நடத்தப்படவுள்ளதாக பாதுகாப்புத் துறையின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

கட்டுரை, வினாடி-வினாடி, பாட்டு மற்றும் ஓவியப்போட்டிகள் இதில் இடம்பெறும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் வெற்றிபெறுபவர்களுக்கு ரொக்கப் பரிசு வழங்கப்படும் என்றும், குடியரசு தின அணிவகுப்பை பார்வையிடுவதற்கான அழைப்பிதழ் வழங்கப்படும் என்றும் அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த போட்டிகள் அடுத்த மாதம் 1 ஆம் தேதி தொடங்குவதாகவும், My Gov இணைய தளத்தில் இதுகுறித்து அறிந்து கொள்ளலாம் என்றும் அந்த செய்திக் குறிப்பில் பாதுகாப்புத் துறை கூறியுள்ளது.

>><><><><<

அரசியல் சாசன தினம் கொண்டாடப்படும் இன்றைய தினம் பாரத ரத்னா அம்பேத்கரின் சிலை பாரீஸில் உள்ள யுனெஸ்கோ தலைமையிடத்தில் திறக்கப்பட்டு உள்ளது வரலாற்றுச் சிறப்புமிக்கது என்று மகாராஷ்டிரா முதலமைச்சர் திரு தேவேந்திர பட்னாவிஸ் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதுகுறித்து விடுத்துள்ள செய்தியில், மகாராஷ்டிரா அரசு இந்த சிலையை பரிசாக வழங்கியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

நாட்டு மக்கள் அனைவருக்கும் இது பெருமிதம் அளிப்பதாக உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அம்பேத்கரின் புகழை உலகெங்கும் கொண்டு சேர்ப்பதில் மகாராஷ்டிரா அரசு உறுதியுடன் இருப்பதாகவும் திரு தேவேந்திர பட்னாவிஸ் கூறியுள்ளார்.

>><><><><<

இந்தியாவும், வெனிசுலாவும் பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது என முடிவு செய்துள்ளன.

புதுதில்லியில் நடைபெற்ற வெளியுறவு அதிகாரிகள் நிலையிலான பேச்சுக்களில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

வர்த்தகம், சுகாதாரம், டிஜிட்டல் தொழில்நுட்பம், வேளாண்மை மற்றும் மருந்துத் துறையில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான அம்சங்கள் குறித்து இதில் தீர்மானிக்கப்பட்டது.

>><><><><<

பெல்ஜியத்தில் தொழிலாளர் சீர்திருத்தங்களுக்கு எதிராக நடைபெற்று வரும் வேலை நிறுத்த போராட்டத்தின் இறுதி நாளான இன்று விமான சேவைகள் பெருமளவு பாதிக்கப்பட்டன.

Brussels விமான நிலையத்தில் பல விமானங்களின் சேவைகள் ரத்து செய்யப்பட்டன.

இந்த வேலை நிறுத்தம் காரணமாக பொது போக்குவரத்தும் பெருமளவு பாதிக்கப்பட்டதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

>><><><><><<

விளையாட்டுச் செய்திகள்

2030 ஆம் ஆண்டு காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் இந்தியாவில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோவில் நடைபெற்ற காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளுக்கான பொது சபை கூட்டத்தில் இதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

இதன்படி குஜராத் மாநிலம் அகமதாபாதில் இந்த போட்டிகள் நடைபெறவுள்ளன.

-----------------

உலக இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Ankur Bhattacharjee – Taneesha Kotecha இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவில் Ankur Bhattacharjee – Abhinandh Pradhivadhi இணையும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

-------------

சையத் மோடி சர்வதேச பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் கிரண் ஜார்ஜ் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

லக்னோவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 21-17, 21-9 என்ற செட்கணக்கில் இஸ்ரேலின் Daniil Dubovenko -வை வென்றார்.

ஸ்ரீகாந்த், அனுபமா உபாத்யாயா, தருண் மன்னேபள்ளி, இஷாராணி பர்வா, மிதுன் மஞ்சுநாத் ஆகியோரும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

----------------------

இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் தென்னாப்பிரிக்கா 408 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்று இரண்டுக்கு பூஜ்யம் என்ற ஆட்டக்கணக்கில் தொடரை கைப்பற்றியது.

**>> <<**